


[illegible] பதிப்பகம்,
[illegible]-சேலம்.

Best copy available

# ★ ★ ஏகபாரத வேங்கைகளின்

# இலங்கை வாழ் தமிழினத்தின்

“கடல் ஏன் உப்புக் கரிக்கிறது?”

“தாயகம் துறந்து செல்லும் தமிழர்கள் கப்பலின் மேல் தளத்தில் நின்றவாறு கண்ணீர் வடிப்பதால்!”

—அறிஞர் கூறிய இந்த வாசகங்களை மெய்ப்படுத்தி; மாதாவால் மறக்கப்பட்டு இலங்கையின் தேயிலைத் தோட்டத்திலே; பாம்புக்கும். தேளுக்கும் பதில் சொல்லி கூலிகளாய் வாழும் ஆயிரக் கணக்கானோர் கண்ணீர் வடித்தபடி எழுப்பியிருக்கும் உள்ளக்குமுறல்களை இரு அறிக்கை வடிவில் அனுப்பியிருக்கின்றனர், அங்குள்ளோர்!

இதைப் படித்துப் பார்த்த பின்னர் சொல்லுங்கள் :

★ உங்களோடு பிறந்த அண்ணன், தங்கை, அக்காள், தம்பி—புது வாழ்வு பெற வேண்டாமா ?

★ அவர்களெல்லாம் ஈழத்திலே அநாதைகளாகத்தான் காவு கொடுக்கப்பட வேண்டுமா?

அய்யகோ, வேண்டாம்! தமிழினம் நம் தலைமுறையில் சீரழிந்துபோக வேண்டாம்! அன்றொரு நாள் ஈழத்தை வென்று கப்பல் கணக்கிலே சிங்களவரை அடிமைப் படுத்தியவன் நம் பாட்டன்! அந்தப் பழம் பெருமை இன்று கனவாய்—பழங் கதையாய்ப் போக வேண்டாம்!

வோட்டுச் சாவடியிலே அதோ, அங்கே “உதய சூரியன்” சின்னத்தைப் பாருங்கள். அதில் ஈழத்திலே அடிமையைவிடக் கேவலமாய் வாழும் உங்கள் சொந்தக்காரன்—குடும்பத்துள் ஒருவன்—கண்ணீரும் கம்பலையுமாய் நிற்பது தெரியும்!

“என்னைக் காப்பாற்றுங்கள்; உங்கள் சகோதரன் கூலியாய் வாழ; நீங்கள் மட்டும் பெரு வாழ்வு வாழ நினைக்காதீர்கள்; அது அடுக்காது. என் உரிமைப் பசியைத் தீர்க்க உங்கள் ஓட்டுக்களை இந்தப் பெட்டியிலே போடுங்கள்”—என்று அந்தப் பரிதாபத்திற்குரிய ஈழம் வாழும் இளந் தமிழன் உங்களைப் பார்த்துக் கதறுவான். அவன் வேண்டுகோளை செவிமடுங்கள், வாக்காளர்களே! அவன் உங்கள் கூடப் பிறந்தவன்! அவனுக்குத் துரோகம் செய்யாதீர்கள்!

தேர்தல் களத்திலே தினந் தினம் வந்து குவியும் திருகுதாள. தெகிடுதத்தச் செய்திகளுக்கு மத்தியிலே ஈழத் திருநாட்டில் இடர்பட்டு ஏங்கிக் கிடக்கும் எங்களின் ஏக்கக் குரலையும் கொஞ்சம் செவிமடுத்து விட்டுச் செயலாற்றமுற்படுங்கள் என்று, தமிழக வாக்காளர்களாகிய உங்களைப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

இலங்கையிலே இந்தியப் பரம்பரையினர்களாகிய தென்னாட்டவர்களுக்கு எந்தவித உரிமையும், மதிப்பும், மரியாதையுமில்லாமற் போனதற்கே முதற்காரணம் நேரு பெருமகனாரின் வெளிநாட்டுக் கொள்கைதான்! ஆசியா கண்டத்தில் தன்னை ஆதரிக்க ஒரு சில நாடுகள் வேண்டுமென்பதற்காக, வெளி நாடுகளில் வாழ்ந்து வரும் தென்னாட்டவர்களையே பலிகொடுத்து விட்டார் ஆசியாவின் ஜோதி! இலங்கையின் குடியுரிமைக்கு மனுச் செய்திருந்த லட்சக் கணக்கானவர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டு நாடற்றவர்களாக மாற்றப்பட்டு விட்டனர். இதுபற்றி ஒரு வார்த்தை கூட நேரு அரசாங்கம் கூறவில்லை. கூறினால் அவரது உலகப் புகழுக்குக் கறை ஏற்பட்டு விடுமென எண்ணியிருக்கின்றார்! சென்னை ஆட்சியும் செயலற்றுக் கிடக்கிறது!

மொழியுரிமை கோரி கொழும்பு நகரத்தில் தமிழ் மக்களின் அறப்போர் நடைபெற்றபோது கடையர்களும், காலிகளும் வேண்டுமென்றே தமிழர் கடைகளையும், வேட்டி கட்டிய தமிழர்களையும் தாக்கிக் கொள்ளையடித்தனர். அந்த நேரத்தில் எங்களின் நேரு—பண்டிதரின் தூதுவராலயம் இங்கு என்ன செய்து கொண்டிருந்தது தெரியுமா? இந்தியப் போர்க் கப்பல்களான கோதாவரி, கோமதியில் கொழும்பு துறைமுகத்தில் (கொக்டைல்) நடனம் நடத்திக் கொண்டிருந்தது என்று கூறும்போது நாமனைவரும் வெட்கித் தலை குனியத்தான் வேண்டும். எனப்படி நடந்து கொண்டனர் என்றால் அடிபட்டவனும், உதைபட்டவனும், உடைமையை இழந்தவனும் ஏமாந்த தமிழன் தானே! கொழும்பிலிருக்கும் அந்த இந்தியத் தூதுவராலயத்தில்கூட தென்னாட்டுத் தமிழன் துச்சமாகத்தான் மதிக்கப்படுகிறானென்ற உண்மையை அன்பு கூர்ந்து அங்கு தொல்லைப்பட்டு வந்து சேர்ந்திருக்கின்ற உங்களின் உறவினர்களை-நண்பர்களைக் கேட்டுப் பாருங்கள் தோழர்களே; கேட்டுப் பாருங்கள்!

1954-ல் கம்பளையில் நடைபெற்ற மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களின் மாநாட்டில் சொற்பொழிவாற்றுவதாக ஒப்புக் கொண்டிருந்த வீரர் நேரு “இலங்கை அரசாங்கம் அனுமதிக்கமாட்டேனென்கிறது” என்று கூறி அந்த மிகப் பெரிய கூட்டத்தில் சொற்பொழிவாற்ற கடைசி நேரத்தில் மறுத்துவிட்டதிலிருந்து, சிறிய இலங்கை பெரிய நாட்டின் பிரதமரை எப்படி ஆட்டி அசைத்து வைத்திருக்கின்றது என்பது எல்லோருக்கும் புரியும். இலங்கையின் மலிவான பொருள் தமிழனின் உயிரும். உடைமையும் தானென்பதை மறந்துவிடாதீர்கள்.

தமிழன் மொழி இலங்கையில் தாழ்த்தப்பட்டு, ஆழ்த்தப்பட்டு வருகிறது. தமிழன் தாக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, ஓட்டப்பட்டு வருகிறான். தமிழ்த் தாய்மார்களின் கற்பு சூறையாடப்பட்டு வருகிறது என்பதற்கு மன்றில் நடைபெற்றுவரும் முத்தம்மாள் வழக்கு உலகுக்கு உரைக்கும். எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்டு, நாடற்றவர்களாக நாதியற்றவர்களாக மதிக்கப்பட்டு உயிரைச் சுமந்துகொண்டு இங்கு தமிழர்கள் அலைகின்றனர். இந்த மானங்கெட்ட நிலை உருவாகக் காரணம், தன்மானமிக்க தமிழ் அமைச்சரவை தமிழகத்தில் இல்லாததுதான் என்பதை, வாக்காளர்களே! எங்களின் வழித்தோன்றல்களே! எண்ணுங்கள்; எழுச்சி பெறுங்கள்!

இந்த எங்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டுமானால், நிச்சயம் தமிழகத்திலாவது மானமுள்ள செயல் வீரர்களின் அமைச்சரவை இருக்க வேண்டும். அதற்கு இந்த தேர்தல் ஒரு நல்ல வாய்ப்பு என்பதை எங்களின் உற்றார் உறவினர்களாகிய உங்களுக்கு நினைப்பூட்டுகிறோம். கொச்சைத் தமிழ் பேசும் பச்சைத் தமிழரின் ஆட்சிக்கு இச்சை கொண்டலையும் ஈ. வே. ரா. போன்றார்களின் எழுச்சியற்ற, உறுதியற்ற நிலை கண்டு வருந்துகின்றோம்; வெட்கப்படுகின்றோம்.

இந்தத் தேர்தலில் முதன் முறையாகப் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நல்ல செயல் வீரர்களடங்கிய இயக்கம். அந்த இயக்கத்தினர்தான் பல தடவைகளில் இலங்கைவாழ் தமிழர் நிலை பற்றி பல நல்ல தீர்மானங்கள் நிறைவேற்றி ஆதரவும் அன்பும் காட்டியிருக்கின்றனர். அத்தகைய செயல் வீரர்களைக் கொண்ட இயக்கத்தினர் இந்த தேர்தலில் பெருவாரியாக வெற்றிபெற்றால், நிச்சயம் கடல் கடந்த நாடுகளில் வாழும் எங்கள் போன்ற ஏழைத் தமிழ் மக்களின் வாழ்வு சிறக்கும்; வளம் பிறக்குமென நிச்சயமாக நம்புகின்றோம். ஆகையால் பெருமைக்குரிய வாக்காளப் பெருமக்களே! எங்களின் உற்ற நண்பர்களே! உடன் பிறந்தார்களே! உதய சூரியன் வெற்றிபெற உதவுங்கள்; உழையுங்கள்! வணக்கம்.

இங்ஙனம்,
**இலங்கைவாழ் தமிழர்கள்.**


## ‘மக்களாட்சி’

(திங்களிருமுறை)

ஆசிரியர்:
மீ. சு. இளமுருகு பொற்செல்வி

1—3—57 இதழில் :

- அவர்கள் அபேட்சகர்கள்
- குத்தூசியாருக்கு
- பெரியாரும்—நாமும்
- தேர்ந்தெடுங்கள்.

இன்னும் பல

விபரங்கட்கு :—

“மக்களாட்சி”
32, மேலப்புலிவார் தெரு,
திருச்சி—1. (தமிழ்நாடு)

எலலா ஊர்களிலும்
விற்பனையாளர்கள் தேவை.

# விலாவினை ஒடிப்பீர்! ★ ★

# விம்மல்தனைக் கேட்பீர்!

சிங்கத்தின் குகையிலே புகுந்து விளையாட நினைக்கின்ற நரிக்குணங் கொண்ட ஆட்சி, தென்னகத்தின் வளத்தை ஆலையிலிட்ட கரும்பாக்கி அதை டெல்லி ஆதிபத்தியத்தின் விருந்தாக்கி விட்டது! இன்று எல்லாத் துறைகளிலும் திராவிடம் வடவனிடம் தாழ் பணிந்து வாழுகின்றது! இந்த அவலநிலையை மாற்றியமைக்க,

"எலிகள் புசிக்க
எல்லாம் கொடுத்தே–சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? இனி
புலிகள் நரிக்குப்
புசிப்பளித்தே—பெரும்
புதரினில் தூங்கிடுமோ?"

எனச் சூளுரைத்து தேர்தல் களத்திலே குதித்துவிட்டது, தி. மு. கழகம்!

ஆம்! இலங்கைவாழ் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தென்னாட்டு வாக்காளர்களை உரிமையுடன் கேட்டுக் கொள்கிறார்கள்! ஏன்? கடல் கடந்த நாடுகளிலே நாளிலும் பொழுதிலும் அடக்குமுறைகளுக்கு உள்ளாகி—அரசியல் உரிமை இழந்து நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்கள் சிந்திக் கொண்டிருக்கும் ரத்தக் கண்ணீர்மீது ஆணையிட்டு உருக்கமாக வேண்டுகிறோம்!

தி. மு. கழக அபேட்சகர்களுக்கே உங்கள் வாக்குகள் என உறுதிப்படுத்துங்கள்!

உலகம் தட்டையானது என்று பிற நாட்டார் எண்ணிக் கொண்டிருந்த காலை, சுற்றிலும் புடைசூழ கடலிலே கலம் செலுத்தி வெற்றி முரசொலித்து வீறுநடை போட்டு தமிழகத்தின் புகழை திக்கெட்டும் பரப்பி கொடி கட்டி வாழ்ந்திருக்கிறான் நம் முன்னவன்! இன்றோ; நாம் வடவனிடம் கைகட்டி வாய்பொத்தி வாழ்கின்றோம்! வென்று திறை கொண்ட வேல்வேந்தர் கான் முளையீர்! இன்று வலியிழந்தோம், எனர் புலியானோர்! நம்மைப் பணிந்தாரை நாம் பணிந்து வாழுகின்றோம்! செம்மைப்பட ஒருநாள் வாராதோ? தென்னாட்டீர்!—என ஏங்கிக் கொண்டிருந்த நிலையைப் போக்க தென்னாட்டின் தேர்தல் களத்திலே தி. மு. கழகம் இறங்கிவிட்ட நற்செய்தி இலங்கைத் தமிழருக்கு தேன் விருந்தாக அமைந்துவிட்டது!

உரிமை அற்ற காரணத்தால் தாயகத்தின் பெயர் கூவி அழைக்கத் தகுதியற்று, நாதியற்ற நடைப்பிணமாக வாழ்விலே இருள் சூழ்ந்து தத்தளித்துத் தடுமாற்றத்துடன் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு ஒளிகாட்டி தெளிவளித்து, திசை காட்டி திராவிடத்தைக் காட்ட, உதித்துவிட்டான் 'உதய சூரியன்!'

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களே! தாயகஞ்சேர் உங்கள் உற்றார் உறவினர்களின் வாக்குகளை, இதோ நமக்குத் தெளிவளிக்க திராவிடத்தின் இருட்கதவை உடைத்தெறிந்து ஒளி காட்டும் சுடர் விளக்காம் "உதய சூரியன்" சின்னத்தைத் தாங்கியுள்ள தி. மு. கழக அபேட்சகர்களுக்கே அளிக்குமாறு உறுதிப்படுத்தி இவ்வேண்டுகோளை அனுப்பிவையுங்கள்.

இலங்கை மாநகரின் தெருவீதிகளிலே இருமருங்கும் போலிசார் புடைசூழ அரசியல் கைதியாக ஆக்கப்பட்டு புகை வண்டியிலே ஏற்றப்படும் இழிநிலையை தட்டிக் கேட்க நமக்கென ஓர் "அரசு" இல்லையே என்ற துயரத்தை நீக்க, தி. மு. கழகம் தேர்தலிலே ஈடுபடுகிறது — நம்மை நாமே ஆள வேண்டும் என்ற கட்டத்திற்கு நல்லதோர் வாய்ப்பு!

காங்கிரஸ் ஆட்சியின் சீர் கேட்டால் வட நாட்டாரிடம் நமது உரிமையை அடகு வைத்ததால் நமக்கோர் "தனியரசு" இல்லை! "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடு...!" என்று உயர்த்திப் பாடினாரே பாரதி; அந்தப் பொன்னாட்டிலேதான் வாழ வகையற்று கட்டுமரத்திலே ஏறி கடல்கடந்த நாடுகளிலே குடியேறினான்! நூற்றாண்டு காலமாக அந்தந்த நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் உழைத்தும் இன்று வாக்குரிமை மறுக்கப்பட்டு அரசியல் அனாதையாக அவதிப்படுகிறான்! இதை தட்டிக் கேட்பதற்கு தமிழனுக்கென தனியாட்சி நிறுவ வேண்டாமா?

இதை மாற்றியமைக்க இன்று தேர்தல் களத்திலே திட்டங்களை முன் வைத்திருப்பது யார்? யார்? எப்பக்கம் திரும்பினாலும் ஒரே பதில்! ஆம்; அதுதான் தி. மு. கழகம்!

நம்மவர் ஆட்சி நடத்திக் காட்ட தீரர் முகாம் திரண்டுவிட்டது! தேர்தல் களத்திலே ஏறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது! நம்மை இந்த நிலைக்கு உள்ளாக்கிய வடநாட்டு அடிவருடிகள் புறமுதுகிட்டு ஓடோடச் செய்ய, உதய சூரியன் பெட்டிக்கே வாக்களியுங்கள்.

இலங்கை மாநகரிலே நம் தமிழ் அன்னையின் கரங்களில் பூட்டப்பட்டிருந்த அடிமை விலங்கினை உடைத்தெறிய ஆயிரமாயிரம் அறப்போர் வீரர்கள் அணிவகுத்துக் கிளம்பிய போது அவர்களைத் தடியால் தாக்கி மண்டைகளைப் பிளக்க உதவி புரிந்து, பண்டாவின் ஒற்றை ஆட்சியை ஏன் என்று தட்டிக் கேட்க ஓடோடி வந்தவர்கள் யார்? தி. மு. க. தானே! நமக்கென ஒரு அரசு இருந்தால் அதிகார முறையில் தட்டிக் கேட்டிருக்குமல்லவா? தி. மு. க. விடம் துரைத்தனம் இருந்திருந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டு இருக்குமா?

எனவே, அன்பார்ந்த தென்னாட்டு வாக்காளர்களே! தோளோடு தோள் நின்று தோழமையின் நட்போடு தாயகத்தை மீட்போம்; தனியரசு காண்போம்—என வாயாரச் சூளுரைத்து உங்கள் வாக்குகளை உதய சூரியன் சின்னத்தை இதய கீதமாகக் கொண்டு நிற்கும், கொள்கைக் குன்றுகளாம் தி. மு. கழக அபேட்சகர்களுக்கே அளித்து ஆதரித்து ஆட்சிபீடத்திலே அமர்த்துமாறு அன்பாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தி. மு. கழக அபேட்சகர்களின் வெற்றி இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களின் வெற்றி! வாழ்க தி. மு. க.!!

இவ்வண்ணம்,

இலங்கைவாழ்

தமிழ்ப் பேசும் மக்கள்.



## அவர்களுக்கு...!

"இன்றைய நிலையில், பார்ப்பனர், யாரை ஆதரிப்பது என்று தெரியாமல் திக்கு முக்காடிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரசுக்கு ஓட்டுப்போடுவது என்று அவர்கள் நினைக்கும்போதே, 'அக்கிரகாரத்தையே கொளுத்தச் சொன்ன பெரியாரல்லவா இப்போது காங்கிரசிலிருக்கிறார்; எப்படி காங்கிரசுக்கு வோட்டுப்போடுவது?' என்று திகைக்கிறார்கள். 'தி. மு. கழகத்தாருக்கு ஓட்டுப் போடலாம்' என்று நினைத்தால் 'அவரிடமிருந்து வந்தவன் தானே அண்ணாதுரை' என்று நினைத்துக் கொள்கிறார்கள்!

"நாம் இதுவரையிலும் 'பார்ப்பனீயம்' என்ற தன்மையைக் கண்டிக்கிறோமே தவிர–அது கூடாது என்று வலியுறுத்துகிறோமே தவிர, 'பார்ப்பனர்' என்ற தனிப்பட்டோரைத் தாக்கியதே கிடையாது. நான் தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்தபோதே பார்ப்பனரைத் தாக்கிப் பேசக்கூடாதென்று கழகத் தோழர்கள் அனைவருக்கும் தாக்கீது பிறப்பித்தேன். அதைப் போலவே தோழர்களும் அம்மாதிரி தாக்கிப் பேசியது கிடையாது.

"எனவே, தி. மு. கழகம் ஒரு சனநாயகஸ்தாபனம். மக்கள் பணியையே தங்கள் தூய பணியாகக்கொண்ட தொண்டர் முகாம் தி. மு. கழகம். இதுதான் மக்களுக்கும் நாட்டுக்கும் பயன்படுமே தவிர, கழகத்தின்மீது வீண் சந்தேகப்பட்டால் நாட்டில் நிச்சயம் சர்வாதிகாரம்தான் மிஞ்சும் என்று பார்ப்பன நண்பர்களுக்கும் கூற ஆசைப்படுகிறேன்"

—அறிஞர் அண்ணா

அன்புள்ள பொன்முடி,

இது சோஷலிச பாணி சர்க்கார்–என்று ஆவடித் தீர்மானத்திலிருந்து ஆளும் கட்சியினர் கூக்குரலிடுவதை மலாயாவிலிருந்தும் நீ கேட்க முடியாவிட்டாலும் பத்திரிகைகளிலே படித்திருக்க முடியும்!

ஆனால் நண்பனே; அந்த சோஷலிசபணி இன்று பண முதலைகளுக்குப் பணிந்து கொடுத்து நிமிர்ந்து நிற்க முடியாமல் தவிப்பதை என்னென்பது?

ராஜாக்களையும் நவாபுகளையும், ஜமீன்தார்களையும்—காங்கிரஸ் கட்சியினர் ஆதரிக்கிறார்கள் என்பதற்காக மட்டும் நான் இதைக் குறிப்பிடவில்லை.

பழுதற இயங்க வேண்டிய அரசாங்கத்திலும் முதலாளித்துவக் கொள்கை மாற்று உருவில் குடியேறுகிறது என்பது எடுத்துக் காட்டப்படும்போது நல்லவர்கள் உள்ளம் எரிமலையாகத்தானே மாறுகிறது!

நண்பனே! டெல்லி மாநகரிலே அயல்நாட்டுவாசிகளைக் கவர்வதற்காக அரசாங்கமே முயன்று **அசோகா ஓட்டல்** என்னும் பெயரிலே மாபெரும் விடுதி யொன்றை ஏற்படுத்தியது நினைவிருக்கலாம்.

சோஷலிசப் பாதையிலே அக்கறைகொண்ட ஆளும் கட்சி அதை அரசாங்கததின் மேற்பார்வையிலும். நிர்வாகத்திலும் நடத்துவதென்றே முடிவு செய்தது!

—இது கேட்டு மற்ற முற்போக்குக் கருத்தினர் அனைவரும் வரவேற்றனர், ஓட்டல் துறையிலே முதலாளிகளின் ஆதிக்கம் மேற்கொண்டு வளராமல் தடுக்கப்படுகிறதே என்பதற்காக!

ஆனால் அந்த மகிழ்ச்சியிலே இன்று இடிவிழுந்து விட்டது நண்பனே; பேரிடி விழுந்து விட்டது!

அசோகா ஓட்டலில் இப்போது ஆட்சியாளர்களின் நிர்வாகத் திறமையின்மையும் ஊழலும் புகுந்து ஆட்டுவிக்கிறதாம்!

அங்குள்ள தொழிலாளர்கள் அனைவரும் இன்றோ நாளையோ வேலையிலிருந்து நீக்கப்படும் நிலையில் இருக்கிறார்களாம்!

12 முதல் 40 வரை இந்தியச் சமையற்காரர்களை வெளியே அனுப்பி விட்டு; அவர்களை வேலையில்லாத் திண்டாட்டத்திலமிழ்த்தி விட்டு-அவர்களுக்குப் பதிலாக அதிக ஊதியம் தந்து, ஸ்விட்சர்லந்து நாட்டிலிருந்து 5 சமையற்காரர்களை வரவழைக்கப் போகிறார்களாம்!

இவர்கள் மட்டுமின்றி, சமையற்காரர்கள் அல்லாத 400 பணியாளர்கள் வேறு முன்னறிவிப்பு ஏதுமின்றி-வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களாம்!

இதில் 200 பேர்களுக்கு முன்னறிவிப்பு நோட்டீசும்; அது தரப்படாததற்கான சம்பளமும் கொடுக்கப்படவில்லை. நூறு பேர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருந்தும்; அவர்கள் ஏன் விலக்கப் பட்டார்கள் என்பதற்கான காரணம் தரப்படவில்லை!

—அரசாங்கத்து மேற்பார்வையில் நடைபெற்று வரும் ஒரு 'சோஷலிச ஓட்டலில்' இவ்வளவு ஊழல்களும் நடைபெற்று வருகின்றன!

இதைவிட வியப்பிற்குரிய செய்தி என்னவெனில்; அசோகா ஓட்டல் விரைவில் விற்கப்பட இருப்பதாகவும்; அதை டாட்டா வாங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் செய்திகள் உலவுகின்றனவாம்!

ஆமாம்; சோஷலிச பாணி முதலாளித்துவ பாணியாக மாறப் போகிறதாம், அங்கே!

அருமை நண்பா! அசோகா ஓட்டல் மட்டுமல்ல; அசோகச் சக்கரம் பொறித்த இந்த போலி சோஷலிசவாதிகள் ஆட்சிமுறை அனைத்தும் முதலாளிகளின் பின்னணியிலும். அவர்களது கூட்டுறவிலும் நடைபெற்று வருகிறது என்பதற்கு இது மேலும் ஓர் எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறது!

ஒரு ஓட்டலை சரிவர நிர்வாகம் நடத்த முடியவில்லை; அதிலே ஆயிரம் ஊழல்களை வைத்துக் கொண்டுதான் இவர்கள் ஓட்டுக் கேட்க வருகிறார்கள்!

—இது காங்கிரஸ் கட்சியினரின் கூடாரத்திலே இருந்து வீசும் அழுகல் நாற்றம்! இதே நேரத்தில் கண்ணாடி மாளிகையிலிருந்து கொண்டே கற்கோட்டைவாசிகள்மீது கல் வீசிக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுத் தோழர்களைப் பற்றியும் கூறுகிறேன்; கேள்!

தி. மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையைப் பார்த்துவிட்டுப் பலரும் இப்போது உருமிக் காட்டுவதற்கு ஆரம்பித்து விட்டார்கள்.

அதில் சிலர் என்றைக்குமே—எதையாவது குறை சொல்லிக் கொண்டு வாழ்பவர்கள்!

அதில் 'ஜனசக்தி' போன்ற ஏடுகளும்; பேச்சாளர்களும் தி. மு. கழகம் திராவிட நாட்டுப் பிரச்சினையைத் தனது தேர்தல் அறிக்கையில் விட்டு விட்டதாகவே எழுதியும் பேசியும் வருகின்றனர்.

திராவிட நாட்டுப் பிரச்சினையை மறந்து விட்டோமாம், நாம்! — கற்பனை செய்து கொண்டு கேலி செய்வதிலே ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்கள்!

உனக்கு நன்றாகத் தெரியும், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் — என்னும் தத்துவம் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் எவ்வளவு முக்கியமான தத்துவம் என்பது! அது குறித்து 'ஜனசக்தி' 3—2—57-இதழில் வந்துள்ள 'கேள்வி-பதில்' ஒன்றின் முக்கியமான பகுதியை அப்படியே தருகிறேன், இங்கு:

கேள்வி: பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்தான் கம்யூனிஸ்ட்டுகளின் லட்சியம்; அவர்களுக்கு பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்றும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நடைமுறைக்குதவாத தத்துவம் என்று ஸ்ரீ நேரு பேசினாரே; இதற்கு உங்கள் பதில் என்ன?

பதில்: பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற தத்துவம் இன்று நடக்கும் தேர்தலில் வரும் தேர்தல் பிரச்னையல்ல. அடுத்த மாதம் நடக்கப்போகும் தேர்தலில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்காக ஓட்டுப் போடுங்கள் என்று கம்யூனிஸ்ட்டுகள் கேட்கவில்லை.

எப்படி யிருக்கிறது, பார்த்தாயா?

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்னும் தத்துவம் கம்யூனிஸ்ட்டுகளின் இன்றைய தேர்தல் பிரச்சினை அல்லவாம்! அந்தத் தத்துவத்திற்காக ஓட்டுப் போடுங்கள் என்று கம்யூனிஸ்ட்டுகள் கேட்கமாட்டார்களாம்!

அப்படியானால் இந்தத் தேர்தலில் கம்யூனிஸ்டுபோன்ற கட்சிகளின் நோக்கம்தான் என்ன?

அதற்கும் அன்றைய 'ஜனசக்தி' ஏடு கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறது:

"காங்கிரசின் சர்வாதிகாரம் நீடிப்பதா அல்லது அதன் சர்வாதிகாரத்தைத் தடுத்து நிறுத்த சரியான எதிர்ப்பை ஜனநாயக முற்போக்கு எதிர்ப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதா இல்லையா என்பதுதான் நம் முன்னுள்ள பிரச்சினை."

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்னும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சத்துப் பொருளை மறந்து விட்ட கம்யூனிஸ்டுகள்தான் காங்கிரசின் சர்வாதிகாரத்தை நீடிப்பதா? அல்லது எதிர்ப்பதா? என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை—என்று கூறுகிறார்கள்!

ஆனால் அதே நேரம் அதே கருத்துடைய–காங்கிரசின் சர்வாதிகாரத்தை அழிக்க வேண்டுமென்று சூளுரைத்து நிற்கின்ற—தி. மு. கழகத்தைப் பார்த்து திராவிடநாட்டுப் பிரிவினையை ஏன் தேர்தல்பிரச்னையாக்கவில்லை என்று கேட்டு வசைபாடுகிறார்கள்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார தத்துவத்தை தங்கள் தேர்தல் பிரகடனத்தில் வலுவுறுத்திவிட்டு. அவர்கள் நம்மைப் பார்த்து இந்தக் கேள்வியை எழுப்பி யிருந்தால் நாம் அவர்களது துணிவிற்கும் நேர்மைக்கும் பாராட்டு தந்திருக்கலாம்! நாட்டவரும் அவர்களது நெஞ்சு உரத்தை மெச்சியிருப்பார்கள்!

ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லையே!

அவர்களது தேர்தல் பிரகடனத்திலே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றிய பேச்சில்லை; ஆனால் அவர்கள் நம்மைப்பார்த்து உங்கள் தேர்தல் அறிக்கையிலே ஏன் 'திராவிட நாட்டுப் பிரிவினை' இல்லை என்று கேட்கிறார்கள்!

பாவம்; அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! இனியாவது தங்களது குறைகளைத் திருத்திக் கொண்டு பிறரை விமர்சிக்க ஆரம்பிக்கட்டும் என்பதை மட்டும் அவர்களிடம் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோம்!

அன்பு நண்பா! இவர்களது பிதற்றலைக் கண்டு நாம் நமது அறிக்கையில் நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டோமோ—என்று எண்ணிவிடாதே! அப்படிச் செய்வதற்கு நாம் திராவிடர் கழகமுமல்ல; உயிர்ப் பிரச்சினையை ஒத்திப் போடுவதற்கு நாம் கம்யூனிஸ்ட்டுகளுமல்ல!

அன்புள்ள பொன்முடி! கழகத்தின் தேர்தல் அறிக்கை,

"எந்த ஒரு மாநிலமும் எப்போது வேண்டுமானாலும் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து சென்று தனித்து இயங்கும்.

★ தொடர்ச்சி 8–ம் பக்கம்

# தலையங்கம்

உதித்துவிட்டான் செங்கதிரோன் தென்திசையில்
எழுந்திடுவோம் கொத்தடிமை தீர்வதற்கே!

வெள்ளி 1—3—57 சென்னை

## வாக்காளர்களுக்கு

அருமை வாக்காளர் பெரு மக்களே!

இன்னும் சிறிது நேரத்தில் சிலரும்—சிறிது நாட்களில் சிலரும் வோட்டுச் சாவடி நோக்கிச் சென்று இந்த நாட்டின் 'அரசியல் தலை எழுத்தை' மாற்றி எழுதப் போகிறீர்கள்!

இதுவரை உங்கள் நலன்களைத் தூற்றி வந்த தேசீய வீரர்கள் போற்றித் துதியாடியவாறு உங்களைச் சுற்றி வருகின்றனர்!

காடுகளிலும், மலைகளிலும் திரிந்து குள்ளநரிச் செயல் புரிந்தவர் கள்கூட இன்று மக்கள் மன்றமேறி ஓட்டுப் பிச்சை கேட்டவண்ண மிருக்கின்றனர்!

—இந்த இரண்டாவது பொதுத் தேர்தலில்தான் தனது அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக தேர்தல் களத்திலே குதித்திருக்கிறது, தி. மு. கழகம்.

அதனால்தான் சில 'அநாமதேயங்களும்', குழப்பியிருக்கும் குட்டையிலே மீன் கொத்த நினைக்கும் கழுகு மனப்பான்மைக்காரர்களும் அனுபவமற்ற இவர்களை ஆட்சி மன்றத்திற்கு அனுப்பலாமா என்று கேட்கிறார்கள்!

அனுபவம் வேண்டுமாம்—அது ஒன்று மட்டுமிருந்தால் போதுமாம்—ஆண்டுவிடலாமாம்—கூறுகிறார்கள் இந்த அனுபவப் புலிகள்!

அனுபவம்—என்பது என்ன? மனிதனிடம் எல்லாம் போன பிறகு மீதமிருக்கும் ஒன்று!

இன்னும் சொல்லப்போனால் அனுபவம் என்பது வாழ்க்கைக் கப்பலுக்குப் பின்னால் இருக்கும் விளக்கு; வந்த வழியைத்தான் காட்டுமேயன்றி வரவிருக்கும் வழியைக் காட்டுவதில்லை!

—இந்தப் 'பொன்மொழிகளை' யெல்லாம் படிக்க மறந்தவர்கள் மீண்டும் கேட்கிறார்கள்; வசைபாடுகிறார்கள்; தி. மு. கழகத்தவர் அனைவருமே ஆட்சி அனுபவமறியாச் சிறுவர் என்று!

சட்டசபைக்கும் டெல்லி மக்கள் சபைக்கும் போட்டியிட இருபத்தைந்து வயது குறைந்த பட்சம் வேண்டுமென்று விதியிருக்க; அதன்படி போட்டியிடும் நம் தோழர்களை நோக்கித்தான் இவர்களது அவல நாக்கு நீண்டிருக்கிறது!

புவியெல்லாம் பரந்து கிடக்கும் கிருஸ்தவ மதத்தின் மூலவராம் **ஏசுநாதர்** மதஸ்தாபகராய் அனுபவம் பெற்ற பிறகுதானா தனது கொள்கைகளைப் பரப்பினார்?

அவர் சிலுவையிலே குருதி வடித்து; கொள்கைக்காக உயிர் விடும்போது அவரது வயது என்ன? இருபத்தோன்பதுதான்!

முன் அனுபவமற்ற ஏசுநாதர் இருபத்தோன்பது வயதிற்குள் ஒரு மாபெரும் மதத்திற்கே அடிப்படை அமைக்க முடிந்ததென்றால் அந்த வயதைவிட அதிகமிக்க அறிஞர் அண்ணாவும்; நாவலர் நெடுஞ்செழியனும்; அருமைத் தோழர் சம்பத்தும்; மற்றவர்களும் ஏன் நாடாள முடியாது?

ஆங்கிலச் சரிதம் படித்தவருக்கு நன்றாக நினைவிருக்கும் **இளைய பிட்** என்ற பெயர்! அவன் ஐரோப்பியக் கண்டத்தையே ஆட்டிவைத்த நெப்போலியனை எதிர்த்து போர்த் திட்டம் வகுக்கும் பிரதமராயிருந்தான்!

அப்போது அவன் வயது என்ன தெரியுமா? இருபத்தி ஏழுதான்!

அனுபவமில்லாச் சிறுவன்; உலகமறியாக் கைப்பிள்ளை—என்று இந்த நாட்டுச் சோம்பேறிகள் விமர்சனம் செய்யும் பருவம்தான்!

இருபத்திநான்கு வயதிற்குள்; போர்ப் புயலால் சூழப்பட்ட பிரிட்டிஷ் ஆட்சிக் கப்பலை ஆடாமல், அசையாமல், அழியாமல் கரை சேர்க்கும் அளவுக்கு இளையபிட்டிற்கு எங்கிருந்து வந்தது அனுபவம்?

துள்ளித் திரிய வேண்டிய கல்லூரிப் பருவத்தில் அந்த வாலிபன் நாடாளும் அனுபவத்தை எப்படிப் பெற்றான்?

ஞானசம்பந்தருக்குப் பார்வதி ஞானப்பால் ஊட்டியது போல மரியம்மை இளையபிட்டிற்கு ஏதாவது ஞானப்பால் தந்தாரா? அல்லது பரமண்டலத்திலிருந்து ஏசு கிருபை புரிந்தாரா?

எதுவுமில்லை; பின் அனுபவமில்லாதவர் எப்படி நாடாண்டார்?

அறிவு இருந்தது; அதை நல்வழிக்குப் பயன்படுத்தும் திறமை இருந்தது அவரிடம்! அதனால் அவர் நாடாளும் தகுதி பெற்றார்!

ஆனால் இங்கு அறிவும் திறமையுமில்லாச் சிறுமதியாளர்களோ பொது மக்கள் ஏமாந்து இதுவரை அவர்களுக்கு வாங்கித் தந்த அனுபவ முத்திரையைக் காட்டி ஓட்டு கேட்க வருகின்றனர்!

அவர்களது அனுபவத்தைத்தான் நாம் இது வரையில் பார்த்திருக்கிறோமே!

கண்ணீர் வெள்ளமும்; செந்நீர் வெள்ளமும்; பிணமலையும்தானே அந்த 'அனுபவம்' நமக்குக் கொடுத்த பலன்!

அதனால்தான் திறமையின் பெயரால் கேட்கிறோம்! அன்றொரு நாள் கட்டாய இந்தியை எதிர்த்து இன்று கல்லறைச் செல்வமாய்ப் புதைந்து கிடக்கும் தாலமுத்து நடராசனின் பெயரில் கேட்கிறோம்! இரத்தம் இரத்தமாய் வாந்தியெடுத்து செத்த அழகிரிசாமி போன்றாரின் தூய நறுந் தொண்டின் பெயரால் கேட்கிறோம்! கல்லக்குடிப் போராட்டத்தில் உயிர்நீத்த லால்குடி நடராசனின் தியாகத்தின் பெயரால் கேட்கிறோம்! யவனத்தையும் கிரேக்கத்தையும் வணிகத் துறையிலே வெற்றி கண்ட தாயகத்தின் பெயரால் ஆணையிட்டுக் கேட்கிறோம்—

தி. மு. கழகத்திற்கு ஓட்டளியுங்கள்; நிலைகுலைந்து போயிருக்கும் தென்னகத்தைத் தலைநிமிரச் செய்யுங்கள்!

ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை; மாண்டிடும் புழுவே; மகுடம் கழற்று—என்று 'ஏக பாரதத்தவரை'—நோகாமல் வாழ்ந்து நம்மை சோகக் காப்பியமாக்கியிருக்கும் வடநாட்டு சேட்டுகளை—அவர்களது அடிவருடிகளை நோக்கிக் கூக்குரல் எழுப்புங்கள்!

தி. மு. கழகத்தவரை ஆதரியுங்கள்; தேம்பியழுது கொண்டிருக்கும் தென்னிலங்கை; மலாயா வாழ் தென்புலமாந்தரின் கண்ணீரைத் துடைக்கும்! உதய சூரியன் பெட்டியில் ஓட்டுகளை நிரப்புங்கள்; அது வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அதிர் வேட்டுகளைக் கிளப்பும்!

தென்னகத்தில் வளம் கொழிக்க; ஆலைகள் செழிக்க; கனிப் பொருள் சிறக்க தி. மு. கழகத்தை விட்டால் வேறு கதியே இல்லை வாக்காளர்களே; வேறு கதியே இல்லை!


கொத்தான மலர்போல் கருத்துமணம் பரப்பும்

தமிழரின் உள்ளங் கவர்ந்த உன்னத ஏடு சென்ற இதழைவிடச் சிறப்புமிக்கதாய், சிந்தைக்கு விருந்தாய் உருவாகியிருக்கிறது!

★ சிந்தனைக்கு விருந்தூட்டும் சிறு கதைகள்!

★ செந்தமிழ்த் தேனூறும் இலக்கியக் கட்டுரைகள்!

★ சுவைமணக்கும் தொடர் சித்திரம்!

★ சுந்தர மொழியினிலே மேல்நாட்டுக் காவியங்கள்!

★ கண் கவர் ஓவியங்கள்

—இவை யனைத்தும் கொண்ட

முத்தாரம்

மார்ச் 4-ம் தேதி

விற்பனைக்குக் கிடைக்கும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ருசியா பீகம் விலையுயர்ந்த காஷ்மீரக் கம்பளம் ஒன்றில் அமர்ந்திருந்தாள். அவளுக்கருகில் பமீயா நின்று கொண்டு, மயில் தோகை விசிறியினல் விசிறிக் கொண்டிருந்தாள். பட்டும் பீதாம்பரமும், விலையுயர்ந்த மஸ்லின் துணிகளும் அரசியின் மேனியை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அருகில் வெள்ளிக் கோப்பையொன்றில் வாசனைப் பொருள்கள் புகைந்து அறையெங்கும் நறுமணம் பரப்பிக் கொண்டிருந்தது. சற்று தூரத்தில் வைரப் பிடியுடைய ஹூக்கா, வெல்வெட் மெத்தையின் மேல் பொருத்தி வைக்கப்பட்டிருந்தது. தங்கச் சரிகைகளாலும் முத்துச் சரங்களாலும் அலங்கரிக்கப் பட்ட அரசியின் பாதுகைகள், விலையுயர்ந்த தங்கத் தட்டில் வைக்கப்பட்டுவா சற்படி யோரமாகக்காட்சியளித்தது. தங்க 'பிரேம்' போட்ட முகம் பார்க்கும் கண்ணுடியொன்று அரசியின் மடியில் கிடந்தது. அழகுக்கு அழகு செய்யும் பொருட்கள் முகத்தில் கலையாமல் இருக்கின்றனவா என்று அடிக்கடி அந்தக் கண்ணுடியை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் அரசி.

யாகூத் வந்திருப்பதாக அரசியிடம் அறிவிக்கப்பட்டது. உள்ளே அனுப்பும்படி உத்தரவிட்டாள் அரசி.

யாகூத் உள்ளே நுழைந்தான். அவன் வாழ்க்கையிலேயே கண்டிராத அந்த அற்புதக் காட்சி அவனை பிரமிக்க வைத்தது. ஆனுலும் மெதுவாக சமாளித்துக்கொண்டு மண்டியிட்டு அரசிக்கு மரியாதை செய்தான்.

"யாகூத், வீரத்தின் திருவுருவமாய் விளங்கும் உன்னை நேற்றுதான் நான் கண்டேன். இம்மாதிரியான வீரர்களைக் கௌரவிக்க வேண்டியது பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமை! ஆகவே உன்னை அடிமை நிலையிலிருந்து விடுதலை செய்கிறேன். நாளையிலிருந்து நீ டெல்லி அரசி ருசியா பீகத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மெய்க்காப்பாளன். உனக்கு அளிக்கப்பட்டிருக்கும் வேலையின் பொறுப்பு எவ்வளவு பெரியது என்பதைப் புத்திசாலியான உனக்குச் சொல்ல வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்," என்று அழைப்பின் நோககத்தை அரசி அவனிடம் அறிவித்தாள்.

இருக்கின்ற சூழ்நிலையும், அளிக்கப்பட்டிருக்கும எதிர்பாராத பதவியும், தான் காண்பது கனவோ என்று யாகூத்தை ஐயுறச் செய்தது. அவன் பதில் பேசாமல் பிரமை பிடித்தவன்போல் பேசாமல் சிலைபோல் நின்று கொண்டிருந்தான்.

"என்ன யாகூத் யோசிக்கிருய்?" என்று அரசி அவன் மௌனத்தைக் கலைத்தாள்.

"யோசிக்கவில்லை பீகம்; இந்தத் தங்களின் பெருந்தன்மைக்கு நான் அருகதையுள்ளவனு என்றுதான் பயப்படுகிறேன்......"

"தட்டிப் பார்த்துத் தரம் காண்பதிலே உங்கள் பீகம் கெட்டிக்காரி, யாகூத்! நீ ஒன்றும் சோடையாகி விடமாட்டாய்......"

யாகூத் நன்றியுணர்ச்சியோடு அவளைப் பார்த்தான்; அப்பொழுதுதான் அவள் அருகில் இருக்கும் பமீயாவையும் கவனித்தான். பமீயாவின் முகத்தில் மகிழ்ச்சியொளி வீசியது. யாகூத், பூமியைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு அரசியிடமிருந்து விடைபெற்றுப் புறப்பட்டான்.


அரசி திருப்தியோடு புன்முறுவல் பூத்தாள். அவள் இச்சைக்கும் பூர்த்திக்கும் இடையேயுள்ள தடைகள் எல்லாம் தவிடுபொடியாகிவிட்டதாக மகிழ்ந்தாள். உள்ளத்தில் வெற்றி எக்காளமிட தலை நிமிர்ந்தாள்.

பமீயா, யாகூத் சென்ற திக்கையே ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள். ருசியா பீகத்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது!

யாகூத்திற்கு ஒரே இன்பமாக இருந்தது. காரணம், அரசியின் அருகில் இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது அல்ல; அழகி பமீயாவின் அருகிலேயே இருக்கும் பெறற்கரிய நிலையல்லவா அவன் பெற்றிருக்கிருன்?

பமீயா — ஆகா, அரேபியப் பாலைவனம் போலிருந்த அவன் உள்ளத்தில் கங்கையின் பசுமையை அல்லவா அவள் உண்டாக்கி விட்டாள்! உயிர் பெற்ற அந்தப் பளிங்குச் சிலையின் காந்தக் கண்கள் அவனைப் பரவசப்படுத்திக் கொண்டேயிருந்தன; கனிமொழி, அவன் கவலையை யெல்லாம் நொடிப்பொழுதில் மறக்கச் செய்தது. அடிமையின் வாழ்க்கையில் இப்பொழுது, இன்ப ஆலாபனம் கேட்கத் தொடங்கியது.

அரசியின் மெய்க்காப்பாளன் அடிமையாக இல்லாமல் இருந்தால் மட்டும் போதுமா? அவனுக்கு அந்தஸ்து வேண்டாமா? ருசியா பேகம் சிந்தித்தாள் ... விளைவு; சீக்கிரமே யாகூத் அமீர்—உல் ஓம்ரா என்ற பிரபு ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டான். பரம்பரையாகவே பிரபு வம்சத்தில் வந்தவர்களுக்கு அரசியின் இந்தச் செயல் ஆத்திரத்தை மூட்டியது. அடிமை அந்தப்புரத்தில், அரசியின் மெய்க்காப்பாளனுக இருப்பதே இஸ்லாமிய வழக்கததிற்குப் புறம்பானது. அதுவே ருசியா பீகத்திடம் பிரபுக்களுக்கு வெறுப்பை உண்டாக்கியிருந்தது. இப்பொழுது அவன் அவர்களுக்குச் சமமாக ஓம்ராவாகவும் ஆக்கப்பட்டால்......




கொதித்தனர் பிரபுக்கள்; தூபமிட்டனர் அரசியின் விரோதிகள். அரசியின் நடத்தைப் பற்றி அவச் சொற்கள், மக்கள் மண்டபங்களில் —வியாபார ஸ்தலங்களில்— எங்கெங்கே மக்கள் கூடுகிருர்களோ, அங்கெல்லாம், முதலில் ரகசியமாகவும் பிறகு நாளடைவில் பகிரங்கமாகவுமே மக்களால் பேசிக் கொள்ளப்பட்டன!

ருசியா பீகத்திற்கு பெய்ராம் என்ற ஒரு தம்பி யிருந்தான். திருமணமாகாத தன் சகோதரி இம்மாதிரி தூற்றப்படுவது அவனுக்கு வேதனையாக இருப்பதுபோல் மக்களிடம் நடித்தான். உண்மையென்னவென்ருல், எந்தக் காரணத்தின் அடிப்படையிலாவது ருசியாவின்மீது மக்களுக்கு வெறுப்புத் தோன்றிவிட்டால் அரியணை தனக்குக் கிடைக்காதா என்ற சபலம்தான் பெய்ராமுக்கு! மற்றபடி, ருசியாவின் நடத்தை ஒழுக்கமுடையதா அல்லது அல்லாவின் கட்டளைக்குப் புறம்பானதா என்பதைப் பற்றி யெல்லாம் அவன் கவலைப்படவே யில்லை. ஆகவே, வெறுப்படைந்த பிரபுக்கள் அவர்களுடைய மன வேதனையை பெய்ராமிடம் சொல்லித் தீர்த்தனர். பெய்ராமும் அவர்கள் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பை விசிறி கொண்டு விசிறினன்.

* * *

அரசி ருசியாபீகமோ யாகூத்தின் கவனத்தைத் தன்பால் இழுக்கும் முயற்சியில் அதி தீவிரமாக ஈடுபட்டிருந்தாள்.

"யாகூத்!" என்று கூவுவாள், குயில் நாணும் குரலோடு!

அவன் நிமிர்ந்து பார்ப்பான். பதில் ஏதும் பேசாமல், விழிகளால் அவனை விழுங்கியபடியே புன்முறுவல் பூப்பாள், காமம் கண்களில் கரை புரண்டோடும். கைகள் மேலாக்கின் நுனியை விரல்களால் நிரடும். யாகூத் அவள் உத்தரவுக்காகக் காத்து நிற்பான். ஒன்றுமே பேசாமல் அவனை ஓரக்கண்ணுல் பார்ப்பாள்.

'என்ன யாகூத்; பேசாமல் நிற்கிருய்?" என்பாள்.

'பீகம் சாகிபாவின் ஆணைக்காகக் காத்திருக்கிறேன்" என்பான்.

'எப்பொழுது பார்த்தாலும் ஆணை, ஆணை, ஆணை தான் உனக்கு... ஏன் யாகூத், ஓம்ராவாகியும் நீ பழையபடியே'

"அடிமையானுலும், ஓம்ராவானுலும் நான் அரசியின் ஆணை கேட்க வேண்டியவன் தானே!"—இப்படிப் பதிலளிப்பான் யாகூத்.

அரசி அவனிடம் நடந்து கொள்ளும் முறை அவனுக்குப் புதிராகவே இருந்தது. எவரிடமும் பிரபுவானுலும் மந்திரியானுலும் கட்டளையிட்டே பேசும் பீகம், அவனிடம் மட்டும் குழைந்தாள் — கொஞ்சினுள்! அவனிடம் அவள் பேசும் பொழுதெல்லாம் பக்குவமாக வேலை சொல்லிப் பணிப்பெண்களை வெளியே அனுப்பி விடுவாள்!

பழரசம் பணிப் பெண்கள் கொடுப்பதுபோய், அதற்குக் கூட இப்பொழுது யாகூத் தேவைப் பட்டான் கிண்ணத்தை அவன் கரத்திலிருந்து வாங்கும்போது விரல்களால் அவன் கரத்தைத் தீண்டி எண்ணத்தை வெளிப்படுத்துவாள். ஆனல் யாகூத்தோ, உள்ளத்தைக் கொள்ளையடித்துப்போய் விட்ட பமீயாவையே நினைத்து இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருப்பான்.

பதவியை வீசியும் பக்குவமடையாத யாகூத்தின் மேல் சில சமயங்களில் அரசிக்குச் சினம் தோன்றும். ஆனல் கோபம் தாபத்தைத் தணித்து விட முடியுமா என்ன? இன்றில்லாவிட்டால் நாளை, நாளையில்லா விட்டால் மருநாள், யாகூத் அவள் இஷ்டத்திற்கு இணங்கும் ஒரு நாள் வந்தே தீரும். அந்த நாளைத் தன்னுடைய மறுக்க வொண்ணு அழகும், மண்டிலங்களையே கட்டியாளும் அதிகாரமும் கொண்டு வந்து நிறுத்த முடியும் என்பது ருசியாவின் அசையாத நம்பிக்கை.

அரசி முன்னெச்சரிக்கையாகவே, பமீயாவும் யாகூத்தும் ஒருவரை யொருவர் சந்திக்கும் வாய்ப்பை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு குறைந்திருந்தாள். விரும்பியிருந்தால் பமீயா யாகூத்தை சந்திக்காமலே செய்ய அவ்வால் முடியும். ஆனால் கொடி கட்டி ஆளும் கோமானோடு, எடுபிடி வேலை செய்யும் பணிப்பெண் போட்டியிட்டு யாகூத்தின் உள்ளத்தைக் கவர முடியாது என்று அரசி எண்ணினாள். தவிர, ருசியா அதிகாரம் துணை நிற்கும் அழகி; பமீயாவோ, பணிப்பெண்! ருசியா, தொடுக்கப்பட்ட மலர் மாலை; பமீயாவோ வேலியோரம் மலர்ந்த பூ! யாகூத்தும் அப்படியொன்றும் மூட்டாள் அல்ல என்பது அரசியின் அபிப்பிராயம்.

* * *

நடு நிசி!

யமுனையாற்றங்கரையில் மரத்தினடியில் யாகூத்தின் மடியில் பமீயா தலை வைத்துப் படுத்துக் கிடந்தாள்.

"பமீ, உங்கள் அரசியின் போக்கு வரவர எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை; என்னை என் திறமைக்காக மட்டும் பீகம் மெய்க்காப்பாளனாக்க வில்லை...!"

"எப்படியிருந்தாலென்ன? நம் இருவருடைய உள்ளமும் ஒட்டி உறவாட சந்தர்ப்பம் அளித்தது பீகம்தானே? அதற்காகவாவது நன்றி செலுத்த வேண்டாமா யாகூத்..."

"நாம் இருவரும் இப்படி யமுனையாற்றங் கரையில் சந்திப்பது அரசிக்குத் தெரிந்தால் கூட......"

"ஏன் தெரியப் போகிறது? இந்த மரங்களுக்கு வாய் இருந்தாலும் கோள் சொல்லும்..."

"போதும் பமீ, உன் கேலி... அரசியின் போக்கு இப்படியே இருக்குமானால், பீகத்தின் சேவகத்திலிருந்து விலகிவிடலாமென்று நினைக்கிறேன்..."

"வேண்டாம் யாகூத்...நீங்கள் போவதானால் என்னையும் உடன் அழைத்துப் போய் விடுங்கள். நாம் எங்கு சென்றாலும் பீகத்தின் அதிகாரம் நம்மைத் துரத்திக் கொண்டல்லவா வந்துவிடும்" — உண்மையிலேயே பமீயா பயந்தாள்.

"உங்கள் பீகம் எதுவும் செய்வார்கள்!" என்றான் யாகூத்

யாகூத் கூறிய உண்மையை அனுபவத்தில் அறிந்தவள் பமீயா. அவள் சிந்தனையில் மூழ்கினாள்.

சாதலரிருவரும் இப்படி அளவளாவி மகிழ்கையில்சற்று தூரத்தில் குதிரையின் குளம்படி ஓசை கேட்டது. இருவரும் மௌனத்தில் ஆழ்ந்தார்கள். ஓசை, அவர்களை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தது. பமீயா, பயந்தாள். அவளை மார்போடு அணைத்தபடியே பக்கத்திலுள்ள புதருக்கு அருகில் போய் ஒளிந்து கொண்டான் யாகூத். அவனுடைய கை தானாகவே உறையிலிருந்த வாளை உருவிக் கொண்டது.

4

அவர்கள் இருந்த மரத்தினடியில் இரண்டு குதிரைகள் வந்து நின்றன. இரண்டு பேர் குதிரைகளிலிருந்து கீழே குதித்தார்கள்.

"பெய்ராம், சத்தியமாகச் சொல்லுகிறாயா, நீ என்னை ஆதரிப்பதாக..."

"இதிலென்ன சந்தேகம், அல்தூனியா! ருசியாவிற்கு எதிராகப் படை மட்டும் திரட்டிவிடு! டில்லியின் ஒம்ராக்கள் அனைவரும் என் கையில்... போர் மூண்டால், ருசியா கட்டாயம் தோற்றுப் போவாள். பிறகு நீ பிதுந்தா மாகாண கவர்னர் அல்ல; பிதுந்தா நாட்டின் பாதுஷா... என்ன தெரிகிறதா?"

"உன்னை எப்படி நான் நம்புவது? ருசியா, உன் சகோதரி; இரத்தபாசம் உன்னை விடாதே!"

"இரத்தபாசம்! அரியணை, ஆரணங்குகள், அதிகாரம்— இவைகளை யெல்லாம் விடப் பெரிதா அது? அல்தூனியா, பெரோஸ் போல் தந்தைக்கு முதல் பிள்ளையாகப் பிறக்காமல் போனேனே என்று ஏங்கி ஏங்கி கண்ணீர் வடித்திருக்கிறேன். பெரோஸ் வீழ்ந்தவுடன் டில்லி பாதுஷாவாகி விடலாம் எனக் கனவு கண்டேன். அந்தக் கனவையும் குலைத்து விட்டாள் ருசியா! அவள் வீழ்ச்சியில் தானப்பா என்னுடைய வாழ்க்கையின் மலர்ச்சியே இருக்கிறது!"

"அப்படியானால் அல்லாவின் ஆணையாக..."

"ஆம், அல்லாவின் ஆணையாக நம் இருவருக்கும் பொது எதிரி ருசியா! வேலைகள் ஆரம்பமாகட்டும் அல்தூனியா..........உன்னிடமிருந்து செய்தி கிடைத்தவுடன்...சரி, நாம் இங்கு நெடுநேரம் நின்று பேசக்கூடாது. மரங்கள்கூட ஒற்றர் வேலை செய்யலாம்..."

இருவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். ஒருவரை யொருவர் மார்புறத் தழுவிக் கொண்டபின், குதிரையின்மீது தாவினார்கள். இரண்டு குதிரைகளும் வெவ்வேறு திக்குகளில் விரைந்து பறந்தன.

* * *

குதிரைகள் பார்வையிலிருந்து மறைந்தபின் யாகூத் பமீயாவும் வெளியே வந்தனர்.

"யாகூத், பீகம் சாகிபாவிற்கு ஆபத்து வந்து விட்டது. இவர்கள் யார் தெரியுமா?"

"தெரிகிறது—சதிகாரர்கள்" என்றான் யாகூத் மௌனமாக.

"ஐயோ, எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது, யாகூத்..."

"ஏன் பயப்படுகிறாய் பமீயா? சதி, சாகசம், சண்டை, சகோதரத் துரோகம் ஆகியவைதானே உங்கள் ஆட்சியின் நித்திய நிகழ்ச்சிகள்! வினை விதைத்த உங்கள் பீகம், தினையா அறுவடை செய்யப் போகிறார்கள்... வெட்கம், பமீயா வெட்கம்!"

"ஐயோ யாகூத், நீங்களுமா இந்த நேரத்தில் விரோதம் பாராட்டுவது? நினைத்துப் பாருங்கள் — அபிசீனியாவிலிருந்து அடிமையாகக் கொண்டு வரப்பட்ட உங்களை ஒம்ரா என்ற உயர்பதவிக்கு உயர்த்தி மெய்காப்பாளராக்கிக் கொண்டது பீகத்தின் பெருந்தன்மை தானே? உங்கள் வீரத்திற்குச் செய்த மரியாதைதானே?"

"பமீ, நீ கள்ளமற்ற பெண். ஆனால் உங்கள் பீகம் நீறு பூத்த நெருப்பு"

"இருக்கலாம் யாகூத். ஆனால் என் விஷயத்தில் பீகம் தவறிழைக்கமாட்டார்கள்!"

யாகூத் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்...?"

"காரணமில்லாமல் யாகூத்துக்குப் பதவிகள் அளிக்கப்படவில்லை; ஒருநாள் உங்கள் பீகம் உன்னைப் போட்டிக்காரியாகக் கருதப் போகிறார்கள்!"

இதுவரையில் விளையாட்டாகப் பமீயா கருதிய விஷயங்கள் இப்பொழுது விஸ்வரூபம் எடுத்தன. அரசியின் ஒவ்வொரு சொல்லும் செயலும் இப்பொழுது புது விளக்கங்கள் தந்தன. அரசி தன்னிடம் நடந்து கொள்ளும் முறை பற்றி யாகூத் பேசியபோதெல்லாம், சாதாரணமாகவும் சற்று விளையாட்டாகவும் கூடப் பமீயா கருதினாள். யாகூத்தின் அழகும் கம்பீரமும் பீகத்தைக் கவர்ந்திருக்கக்கூடும் என்ற உண்மை பமீயாவிற்கு முன்பே புலப்பட்டிருந்தாலும், யாகூத் கூறியபடி, தன்னை அன்போடு வளர்த்து உற்ற தோழியாகக் கொண்ட பீகமே, அவளைப் போட்டிக்காரியாகக் கருதும் நாள் வரும் என்று அவள் எண்ணவேயில்லை.

அரசியின் ஆசைப் பாதையில் அரசியால் காப்பாற்றப்பட்ட அவளே முள்ளாக அமைந்து விட்டாளா?

பமீயா, குழம்பினாள்; யாகூத்தோ கருநீல வானவெளியைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

"யாகூத்! நீங்கள் என்னை மறந்து விடுங்கள்," என்றாள்.

"என்னைச் சாகச் சொல்லுகிறாயா, பமீ!" என்றான்.

"இல்லை; பீகம் சாகிபாவின் இச்சைப்படி வாழச் சொல்லுகிறேன்!"

"மிருகமாகவா...?"

"இல்லை; அரசியின் ஆணை கேட்டு, அவர்களுக்கு எதிராக சதி உருவாகும் இந்த நேரத்தில் அவர்களின் உண்மைஊழியராக...!"

"அதற்கு உன்னை நான் ஏன் மறக்க வேண்டும்?"

"நான் பீகத்திற்குப் போட்டியாக இருக்க விரும்பவில்லை... அவர்களுடைய உப்பில் வளர்ந்தவள் நான்......"

"நம் காதல்......?"

"அரசி ருசியா பீகம் வாழ அதைத் தியாகம் செய்து விடுவோம்!"

"பமீயா...!"

"நான் உங்கள் சகோதரி!"

"உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது பமீ!"

"இல்லை. இப்பொழுதுதான் நான் தெளிவு பெற்றிருக்கிறேன்; என் கடமையை உணர்கிறேன்..."

"கடமையாம் கடமை......" —அவன் சிரித்தான்.

அவள் குதிரைமீதேறிப் புறப்பட்டாள். அவன், அவளை அழைத்தான். அவள் திரும்பிப் பார்க்காமலே போய்க் கொண்டிருந்தாள். அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

கீழ்வானில் வெள்ளி முளைத்திருந்தது!

(தொடரும்)



# கடைசிப் பக்கம்

## எழுத்தாணி

எஸ். தம்புசாமி; ஒரத்தநாடு.

(?) அரியலூர் விபத்திற்கு தி. மு. க. தான் காரணம் என்று காமராசர் குற்றம் சாட்டியதாக 'மித்திரன்' தலைப்புதந்து செய்தி வெளியிட்டிருக்கிறதே: உண்மையா?

அரியலூர் விபத்திற்கல்ல தோழரே; காமராசரின் அரசியல் விபத்திற்கு தி. மு. க. தான் காரணம் என்பது மட்டும் உண்மை!

வி. பெருமாள்சாமி; கோட்டயம்.

(?) தி. மு. க. பதவிக்கு வந்தால் நாடு குட்டிச்சுவராகி விடும் என்று மந்திரி பக்தவத்சலம் பேசினாரமே: அதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

பயப்படாதீர்! ஏதோ நாட்டிலே குட்டிச்சுவர் ஏற்பட்டால் அதற்குப் பக்கத்தில் தான் நிற்பதற்கு வசதியேற்படுமே என்ற தனது ஆசையைத்தான் அமைச்சர் அப்படி வெளியிட்டிருக்கிறார்!

ராமு; திருவல்லிக்கேணி.

(?) தி. மு. க. விற்கு அமெரிக்காவிலிருந்து பணம் வருவதாக முத்துராமலிங்கத் தேவர் கூறிக்கொண்டிருக்கிறாரே!

நேத்தாஜி போஸ் திரும்பி வரும் போது ஒரு வேளை அந்தப் பணமும் தி. மு. க. விற்குத் திரும்பி வருமோ, என்னவோ!

கோபி. செயராமன்; மதுரை.

(?) தி. மு. க. வினர் தேசத் துரோகிகள்; ஏகாதிபத்தியத் தாசர்கள் என்று ஒரு அமைச்சர் சமீபத்தில் பேசியிருப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

பாவம்; அவரது பக்கத்திலேயிருக்கிற மாணிக்க வேலர்; ராமசாமிப் படையாச்சி; ராஜா சர் முத்தையா செட்டியார்; டி. டி. கிருஷ்ணமாச்சாரி போன்றோரை மறந்து விட்டுப் பேசியிருக்கிறார் அமைச்சர்!

## முக்கிய அறிவிப்பு

ஆசிரியர் மு. க. போட்டியிடும் குளித்தலைத் தொகுதியில் மார்ச் 11-ம் நாள் தேர்தல் நடக்க இருக்கிறது. அதை முன்னிட்டு 'முரசொலி' அலுவலகத்திற்கு விடுமுறையாதலால் 8—3—57 இதழ் வெளிவராது. அதற்கடுத்த 15—3—57 இதழ் **அதிக பக்கங்களுடன்** 22—3—57 அன்றுதான் வெளிவருமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## கழகக்காளையரே; கேண்மின்!

இவன் பத்து வேங்கைகளைக் கொன்றவன்; இவன் எட்டு வேழங்களை வீழ்த்தியவன்-என்று கணக்கு சொல்வர் சங்ககால வாலிபர்! அன்புள்ள கழகத் தோழர்களே; அந்தப் பழம் பெருமை மீண்டும் உருவாக; புதுக் கணக்குப் போட்டுவிடுங்கள்!

இவர் நூறு ஓட்டர்களுக்குக் கொள்கை விளக்கம் தந்து உதய சூரியன் பெட்டியை நிறப்பினார்; இவர் ஐம்பது ஓட்டர்களுக்கு இலட்சிய விருந்து கொடுத்து ஓட்டுச் சாவடிக்கு அனுப்பி வைத்தார்!-இதுதான் இனி நீங்கள் சூட்டிக் கொள்ளும் பட்டயமாக இருக்க வேண்டும்!-மறந்துவிடாதீர்கள்!

## கே. ஏ. மதியழகன் சுற்றுப்பயணம்

மார்ச் 2 லால்குடி (மாலை 6 மணி)
திருச்சி (இரவு 10 ,, )
,, 3 சேலம்
,, 5 சென்னை
,, 6 சிதம்பரம்
,, 7 குளித்தலை
,, 8 மதுரை
,, 9 கோவை (மாலை 6 மணி)
வெள்ளலூர் (இரவு 10 ,, )
,, 10, 11 கரூர், குளித்தலை (பார்லிமெண்டரி தொகுதி)

# பழங்குடித் தோழர்களுக்கு ....

பெரியோர்களே!
தாய்மார்களே!

கிருபளானி போன்ற தலைவர்கட்கெல்லாம் எதிர்ப்பின்றி சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கும் காங்கிரசு, மறைந்த நம் அண்ணல் அம்பேத்காருக்கு போட்டியாக சாதாரண ஒரு ஆளை (கசரோல்கர்) நிறுத்தி வைத்து தோற்கடித்தது நாடறிந்த உண்மையாகும். அம்பேத்கார் மறைவுகுறித்து ஏதோ சதி நடந்திருக்கிறது என்று அம்பேத்கார் அவர்களின் குமாரர் எஸ்வந்த்ராவ் மக்கள் சபைக்கு முன் நின்று கண்ணீர் விட்டும் கூட இதுகாறும் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. காங்கிரசை ஆதரிப்பது குஷ்டரோகியைக் கட்டித் தழுவுவது போன்ற செய்கையாகும் என்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் முழங்கி வந்துள்ளார்கள். அவர்கள் சடலத்தை டில்லி சர்க்கார் விமானம் மூலம் பம்பாய்க்குக் கொண்டு வர முதலில் இலவசம் என்று சொல்லி, பின்னர் அசற்குறிய தொகையை வசூலித்துவிட்ட போக்கு கண்டு இந்திய அரசியல் சட்டத்தையே உருவாக்கிய ஒரு மேதைக்கு சர்க்கார் காட்டும் மரியாதை இதுவா—என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களோ முதலாளி தொழிலாளி என்று பேசுவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனரே அன்றி, சமுதாயத்தில் உள்ள சாதி பாகுபாடுகள் பற்றி எதுவும் பேசாமலேயே மௌனம் சாதித்து வருகிறார்கள்—அதோடு காங்கிரசுக்கு நல்ல பிள்ளைகளாக மாறி கடந்த காலங்களில் சட்டசபையில் நமது இழிவு போக்கும் பிரச்சினை குறித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டதில்லை — மாபெரும் தலைவர் அம்பேத்கார் அவர்கட்கு எதிராக அவர்களின் கட்சித் தலைவர் டாங்கே என்பவரை நிறுத்தி டாக்டர் அம்பேத்கார் அவர்களைப் படுதோல்வியடையச் செய்தனர் என்பதும் யாரும் மறுத்திட முடியாததோடு மட்டுமின்றி, அவர்களின் தில்லுமுல்லுகள் அனைத்தையும்அடிக்கடி டாக்டர் அவர்கள் அம்பலப்படுத்தி வந்திருக்கிறார்கள்—இந்நிலையில் நம்முடைய உயிர்ப் பிரச்சினையான சாதி இழிவு போக்கும் முயற்சிக்கு அன்று முதல் இன்றுவரை போராடி வருபவர்கள் திராவிடத் தலைவர்கள் ஆவார்கள்—வகுப்பு உரிமைக்காகத் தமிழகத்தில் பல்வேறு போராட்டங்களை நடத்தியும் ஆலயப் பிரவேசம், கலப்புத் திருமணம் போன்றவைகளையே உயிர்ப் பிரச்சினையாகக் கொண்டு இதுகாறும் போராடி வந்துள்ளார்கள்—40 வயது பெரியவரை 4 வயது சிறுவன் நீ, நான் என்று பேசிய பிற்போக்குத் தனத்தை எதிர்த்துப் போராடி நம்மவர்களை மனிதராக நடத்தச் சொல்லி, சாதிப் பித்தர்களிடம் இடைவிடாது பிரச்சாரம் செய்து வருபவர்கள் திராவிடத் தலைவர்கள் — எனவே நாம் வருங்காலத்தில் மனிதனாக வாழவும் உரிமையோடு வாழ்க்கை நடத்தவும் யார் நம்முடைய பிரதிநிதிகளாகச் சட்டசபைக்குச் செல்லத் தகுந்தவர்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டியது ஒவ்வொரு வாக்காளர்களினுடைய இன்றியமையாத கடமையாகும்—கடந்த தேர்தலில் ஏராளமான தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தோழர்களை எல்லாம் சட்டசபைக்குச் செல்ல அரும்பாடு பட்டவர்களும்; இன்று தலைவர் என். சிவராஜ், ஏ. ரத்தினம் போன்றவர்கட்கு தேர்தலில் ஆதரவு கொடுக்க முன் வந்திருப்பவர்கள் தி. மு. கழகத்தவர்களாகும்.

எனவே தாழ்த்தப் பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெரியோர்களே! தாய்மார்களே! உங்களது மேலான வாக்குகளை தி. மு. கழகத்தாருக்கு "உதய சூரியன்" பெட்டியில் போட்டு, அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

—பம்பாய்வாழ் பழங்குடியினர்

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

உரிமையைத்தானே பெற்றிருக்க" வழி செய்ய வேண்டுமென விளக்கம் தந்திருக்கிறது.

இந்த சுய நிர்ணய உரிமை நாம் கேட்கும் திராவிடத்தின் முதல் படி என்பதை யாரே மறுக்கவல்லார்!

அதுமட்டுமா?

"...சமுதாயத்தில் நிலவும் சாதி முறைக் கேடுகளை ஒழித்துச் சாதிகளற்ற ஒரு சமுதாயத்தைக் காண்பதற்கும், திராவிட நாட்டின் அரசியல் சுதந்தரத்தை உருவாக்கவும், சமதர்மக் குடியரசைக் காணவும் தொடர்ந்து போராடக் கழகம் உறுதி பூண்டிருக்கிறது!"

அன்புத் தோழா! இப்போது சொல்—உயிர்க் கொள்கையை; மூல முழக்கத்தை விட்டுவிட்டவர்கள் யார்? நாமா? கம்யூனிஸ்ட்டுகளா?

விரைவில் சந்திப்போம்.

இங்ஙனம்,
உன் அன்புத் தோழன்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு சென்னை-6. தமிழ்நாடு